தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 12-3-2016

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மிதவெப்ப காய்கறிகளின் விலை சீராக இருக்கும்

உலகளவில் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா இரண்டாவதாக பங்கு வகிக்கிறது. கேரட் மற்றும் பீட்ரூட் விதைப்பு பற்றிய சரியான முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்தது. மேட்டுப்பாளையம் மொத்த சந்தையில் கடந்த 10 வருங்களாக நிலவிய விலைகள் ஆய்வு செய்யப்பட்டன.

### i. கேரட்

தமிழ்நாட்டில், நீலகிரி, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கேரட் பயிரிடப்படுகிறது. மலைப்பாங்கான மண் வளத்தில் பயிரிடப்படும் கேரட் அதிக சுவை, நிறம், வாசனை இவை இயற்கையாகவே காணப்படுவதால் மற்ற மாவட்டங்களில் பயிரிடப்படும் கேரட்டை விட நீலகிரியில் பயிரிடப்படும் கேரட் நுகர்வோர்களால் அதிகளவு விரும்பப்படுகிறது. 2014-15ம் ஆண்டு, தேசிய தோட்டக்கலை வாரியத்தின் படி, தமிழ்நாட்டில் கேரட் 3000எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 1,25,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், மாநிலத்தில் 78 சதவீதம் பரப்பளவிலும் 41 சதவீதம் உற்பத்தியிலும் முக்கிய பங்களிக்கிறது.

விலை விவர ஆய்வின் படி, 2016ம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே, மாதங்களில் கேரட்டின் மொத்த சந்தை விலை கிலோவிற்கு ரூ.28 முதல் 30 வரை நீலகிரி கேரட்டிற்கும், சமவெளியில் பயிரிடப்படும் கேரட்டிற்கு கிலோவிற்கு ரூ.24 முதல் 26 வரை கிடைக்கும் என

கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**ii. பீட்ரூட்**

தமிழ்நாட்டில் பீட்ரூட் மலைப்பாங்கான நீலகிரி, திருப்பூர் மற்றும் தேனி ஆகிய சமவெளி மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. நீலகிரியில் பயிரிடப்படும் பீட்ரூட் நிறம், வடிவம், மெல்லிய தோல் ஆகியவற்றைக் கொண்டு நுகர்வோர்களால் அதிக அளவு விரும்பப்படுகிறது. தோட்டக்கலைத் துறை புள்ளியியல் விவரங்களின் படி, நீலகிரி மாவட்டத்தில், பீட்ரூட் 326 எக்டரில் பயிரிடப்பட்டு 6846 டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

தற்போது பீட்ரூட் தமிழ்நாட்டின் தாளவாடி பகுதியிலிருந்தும், கர்நாடகா குண்டல் பேட் மாவட்டத்திலிருந்தும், மேட்டுப்பாளையம் மொத்த சந்தைக்கு வரத்து துவங்கியுள்ளது. விலை விவர ஆய்வுகளின் படி, 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் - மே, மாதங்களில் மேட்டுப்பாளையம் மொத்த சந்தையில் நீலகிரி மாவட்ட பீட்ரூட் கிலோவிற்கு ரூபாய் 13 முதல் 15 வரையிலும், சமவெளி பீட்ரூட் கிலோவிற்கு ரூபாய் 10 முதல் 12 வரையிலும் இருக்கும் என கணிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் விவசாயிகள், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்குதொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம் - 643 001.
தொலைபேசி: 0423-2442170

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்